பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 13 செவ்வாய்க்கிழமை (26-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 121

# புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு புல்மோட்டையில் 15 படையினர் பலி!

## 48 மணி நேரத்தில் படையினருக்கு கிழக்கில் இரண்டாவது பின்னடைவு

சாவகச்சேரி, மார்ச் 26

**திருகோணமலை மாவட்டம் புல்மோட்டைப் பகுதியில் ரோந்து சென்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது நேற்றுக் காலை 9.30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 15 க்கும் அதிக இராணுவத்தினர் உயிரிழந்தனர்; மற்றும் மூன்று சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.**

கடந்த மாதம் 23 ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்தில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் மூர்த்தி உட்பட நான்கு போராளிகளின் 31 ஆம் நாள் நினைவாகவே இந்த தாக்குதலை தாம் நடத்தியதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சூரியப்பிரகாசம் நடவடிக்கையை விட பெரிய அளவில் அடுத்த நடவடிக்கை

### ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் தயாராம்

வடக்கே படையினர் ஆரம்பிக்க உள்ள அடுத்த ராணுவ நடவடிக்கை, வலிகாமத்தை கைப்பற்றுவதற்காக நடத்தப்பட்ட 'சூரியப் பிரகாசம்' ராணுவ நடவடிக்கையை விட பெரிய அளவினதாக இருக்கும் என்று ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகை முன் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

எந்நேரமும் இந்த பாரிய ராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படலாம் என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தாக்குதல் விமானங்களின் உதவியுடன் பல்லாயிரக்கணக்கான சிப்பாய்கள் இந்த பாரிய ராணுவ நடவடிக்கையில் ஈடுபடத்தயாராக உள்ளனர் என்றும் சண்டே ஒப்சேவர் தெரிவித்துள்ளது.

அதே சமயம் இலங்கையின் வடபகுதியில் வடமராட்சி, தென்மராட்சி தமிழர் குடியிருப்புப் பகுதிகளில் பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை நடத்த இராணுவம் திட்டமிட்டுவருவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-7-6)

## தாக்குதலை நிறுத்தும்படி ஜனாதிபதியை கேட்போம்

### கூட்டணி எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

புதிய ராணுவ நடவடிக்கையை நிறுத்து மாறு தாம் ஜனாதிபதியைக் கோர உள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணி துணைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி நேற்று பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

வடக்கே அகதிகள் பிரச்சினை ஏற்கனவே மோசமடைந்து வருகிறதுஎன்றும்—

புதிய ராணுவ நடவடிக்கை இதனை மேலும் மோசமாக்கும் என்றும் — அவர் தெரிவித்தார்.

ராணுவ நடவடிக்கைக்கு முன்னர் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-6)

## நிவாரணப் பொருள் ஏற்றிய நிலையில் லங்கா கல்யாணி கொழும்பில் தரிப்பு

### வடக்கே புறப்பட படையினர் அனுமதி மறுப்பு

சாவகச்சேரி, மார்ச் 26

இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்களுடன் கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்பட இருந்த ''லங்கா கல்யாணி'' கப்பலுக்கு, கடற்படையினர் அனுமதி வழங்கவில்லை என்று கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணம் வழங்கத் தேவையான உணவுப் பொருள்களை ஏற்றி முடித்த நிலையில் இக்கப்பல் பருத்தித்துறைக்கு மூன்று நாள்களுக்கு முன்னர் புறப்படத் தயாரானதாகவும் —

இக்கப்பல் வடக்கே செல்வதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கவில்லை என்றும்—

இதன் காரணமாக இக்கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ளதாகவும் — சாவகச்சேரிக்கு நேற்றுக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது. (இ-3)

## ஷெல்லுக்கு சிறுமி பலி

வந்தாறு மூலையில் படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் சிறுமி ஒருவர் கொல்லப்பட்டார். நான்கு அப்பாவித் தமிழர் படுகாயமடைந்தனர்.

வந்தாறு மூலையில் விடுதலைப் புலிகள் கடந்த சனியன்று நடத்திய அதிரடித் தாக்குதலில் 40 க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. (இ-7)

## படையினர் மீது கிரானிலும் தாக்குதல்

மொறக்கொட்டாஞ்சேனை, கிரான் பாலப்பகுதி இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றும்— இதில் படையினருக்கு ஏற்பட்ட சேத விவரம் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை என்றும் புலிகளின் குரல் வானொலி நேற்றுத் தெரிவித்தது. (இ-ரி)

## 29ஆம்திகதிவரை நிவாரணம் பெறலாம்

தற்சமயம் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணத்தை எதிர்வரும்29ஆம் திகதி வரை பெறலாம் என்று யாழ். அரச அதிபர் திரு செ. பத்மநாதன் நேற்று தெரிவித்தார்.

இந்த நிவாரண விநியோகம் நேற்றுடன் முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாதம் 50,000 தேங்காய்கள் எடுத்துவர முடிவு

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள தேங்காய் தட்டுப்பாட்டையடுத்து மாதாந்தம் 50 ஆயிரம் தேங்காய்களை கப்பல் மூலம் எடுத்து வர முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் குறித்து ஆராய நேற்று யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அத்தியாவசிய சேவைகளுடன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொலைதொடர்பு நிலையம் அழிப்பு

அம்பாறை மாவட்டத்தில் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்று புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 300 தொலைபேசிகள் செயலிழந்துள்ளன என்றும்—

செயலிழந்த தொலைபேசிகளில் இராணுவத்தினரினதும் அடங்கும் என்றும் — வெரித்தாஸ் தெரிவித்தது.

## கைப்பற்றிய ஆயுதங்கள்

சாவகச்சேரி, மார்ச் 26

திருகோணமலை புல்மோட்டையில் படையினர் மீது நேற்று மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாட விவரம் வருமாறு:-

★ 60 மி. மீ. மோட்டார் - 1
★ ஏ கே. எல். எம். ஜி' - 2
★ ஏ. கே. ரகத் துப்பாக்கி - 13
★ 60 மி. மீ. வை போட் - 1
★ 60 மி. மீ. ஷெல் - 1
★ 60 மி. மீ. பூஸ்ரர் - 20
★ ஏ. கே. எல். எம். ஜி. மகஸின் - 10
★ ஏ. கே. மகஸின் - 40
★ நடுத்தர ரவை லிங்குடன் - 830
★ நடுத்தர ரவை - 865
★ கைக்குண்டு - 11
★ தொலைத் தொடர்பு சாதனம் - 1
★ புலட் புறூ ஜக்கட் - 2

## வங்காலையில் படையினர் வீடு ஒன்றில் கொள்ளை

மன்னார் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள வங்காலையில் சீருடையணிந்த இராணுவத்தினர் வீடொன்றைச் சூறையாடியுள்ளனர்.

கடந்த வியாழனன்று இச் சம்பவம் இடம்பெற்றது.

இரவு நேரம் சென்ற இராணுவத்தினர் வர்த்தகர் ஒருவரின் வீட்டை சோதனையிட வேண்டும் எனக் கூறி உள்ளே சென்று வர்த்தகரின் கண்களைக் கட்டி விட்டு அலுமாரியைத் திறந்து அங்கிருந்த தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர். அதிரடிப் படையினர் போன்று சீருடையணிந்த மூவர் கொண்ட இராணுவக் குழுவே இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டது. (இ-ரி)

## ஜி. சீ. ஈ. சாதாரண தர வகுப்புக்கள் ஆரம்பம்

சாவகச்சேரி, மார்ச் 26

தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஜி. சீ. ஈ. (சாதாரண) வகுப்புக்கள் நேற்று ஆரம்பமாகின.

சாவகச்சேரி நகருக்கு சமீபமாக உள்ள இந்து மகளிர், டிறிபேக், மட்டுவில் ம. வி. மீசாலை வீக்கினேஸ்வரா, மீசாலை வீரசிங்கம் ம. வி. ஆகியவற்றில் இடம்பெயர்ந்தவர்கள் இன்னும் தங்கியுள்ளதால் அங்கு சென்ற மாணவர்கள் இடம் இன்றி வீடு திரும்பினர். பதிவுகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டன.

அதேவேளை —

கொடிகாமம், வரணி, சங்கத்தானை ஆகிய பகுதிப் பாடசாலைகளில் வகுப்புக்கள் நடந்தன.

சில பாடசாலைகளில்மாணவர் வரவு குறைவாக இருந்தது.

இதே வேளை—

பின்வரும் பாடசாலைகளில் கடந்த வருடம் 11 ஆம் ஆண்டு பயின்று தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மாணவர்களை இன்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்குச்சென்று தத்தமது பாடசாலை அதிபர்களைச் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்து, நீர்வேலி அத்தியார் இந்து, உரும்பிராய் இந்து, அளவெட்டி அருணோதயா, அராலி சரஸ்வதி வி., சுதுமலை சிந்மய பாரதி வி., குளமன்கால் றோ. க. பாடசாலை.

## கலைப்பீடத்துக்கு மேலும் 200 பேர்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு மேலும் 200 பேருக்கு அனுமதிகிடைக்கவிருக்கிறது.

விசேடபாடங்களான இந்து நாகரீகம், கிறிஸ்தவ நாகரீகம், வரலாறு, ஆங்கிலம், சமஸ்கிருதம், நடனம், சங்கீதம், நுண்கலை, புவியியல், ஆகிய வற்றுக்கே புதிய மாணவர்கள் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனையாகிறது

1996-97ஆம் ஆண்டுக்கான வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்கள் விற்பனையாகின்றன. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 8, நவீன சந்தை மேல்மாடி (உட்புறம்), சாவகச்சேரி. [41101]

### சனி மாற்றம்

வாங்கி விட்டீர்களா? விற்பனையாகிறது! வேலணை சோதிடர் V. A. சிவராஜா வின் ''வெள்ளி விழா'' வெளியீடான சனி மாற்றம் உங்களுக்கு எப்படி? வாக்கிய பஞ்சாங்கப்படி 25-4-96 தொடக்கம் 2½ வருடப் பலாபலன்கள். (41099)

### தவறிவிட்டது

செல்வி கமலா வினாசித்தம்பி என்பவருடைய கறுப்பு நிற, பேர்ஸ் ஒன்று அடையாள அட்டைகள், பாங் புத்தகம் என்பவற்றுடன் மீசாலை சந்திக்கும் சாவகச்சேரி சந்திக்கும் இடையில் 19-03-96 மாலை ஆறுமணியளவில் தவறவிடப்பட்டு விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சாவகச்சேரி சந்தியிலுள்ள ''பூம் பொய்கை''இல் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றேன். (41217)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான வெற்றிக்கனி தொகுப்பு (இதழ் 1 — இதழ் 6), இதழ் 7 — இதழ்8 விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல.8, நவீன சந்தை மேல்மாடி (உட்புறம்), சாவகச்சேரி. (41088)

## கிளிநொச்சிக்கு மயக்க மருந்து எடுத்துவர தடை

கிளிநொச்சி, மார்ச் 26

கிளிநொச்சி ஆஸ்பத்தியில் சத்திரசிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் மயக்க மருந்தை எடுத்து வர அரசு தடைவிதித்துள்ளது. என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிறிய சத்திரசிகிச்சைகளே மேற்கொள்ளப்படுவதாகவும் — பெரிய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதால் மயக்க மருந்து தேவையில்லை என்றும் — பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எம். எஸ். எவ். வைத்திய நிபுணர்களே இங்கு சத்திர சிகிச்சைகளை மேற் கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ST. JOHN'S COLLEGE & CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA

மேற்படி இரு கல்லூரிகளையும் சேர்ந்த மாணவர்கள் கீழே கொடுக்கப்பட்ட விவரங்களைப் பூர்த்தி செய்து 31 - 03 - 96 க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

1. முழுப்பெயர்:-
2. 1995 ல் கற்றவகுப்பு:-
3. தற்போதைய விலாசம்:-
4. ஆண்டு 1, ஆண்டு 6 ஆகிய வகுப்புக்களுக்கு புதிதாக அனுமதி (1996) பெற்றவர்களும் மேற்படி விவரங்களைச் சமர்ப்பிக்கவும்.

விவரங்களைச் சமர்ப்பிக்கும் இடங்கள்:-

திருமதி S. இராஜதேவன்,
கட்டைவேலி,
கரவெட்டி.

திருமதி T. இராசரத்தினம்,
மெதடிஸ்த மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.

திரு. செ. கணபதிப்பிள்ளை,
''கருணா நிலையம்''
கிளிநொச்சி.

அதிபர்.
பரி. யோவான் கல்லூரி.

(சி/4140)

## சந்திப்பு

யாழ். இந்து மகளிர் கல்லூரி அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கான சந்திப்பு

மேற்படி செயற்குழு உறுப்பினர் யாவரையும் நாளை (27 - 03 - 96) புதன்கிழமை காலை 9-30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

S. இரத்தினராஜா,
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(41098)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## மருத்துவபீட சபைக் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சபைக் கூட்டம் எதிர்வரும் 28 - 03 - 1996 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள சித்தமருத்துவத் துறையில் நடைபெறும்.

மருத்துவபீட சபை அங்கத்தவர்கள், மருத்துவ பீட ஆசிரியர்கள் இக்கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

— மருத்துவ பீடாதிபதி.

(சி/4142)

## யாழ். பல்கலைக்கழகம், இலங்கை
## சித்த மருத்துவத்துறைப் பரீட்சைகள்

எதிர்வரும் 27 - 03 - 1996 ஆம் திகதியன்று ஆரம்பமாகவிருந்த பீ. எஸ். எம். எஸ். 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் ஆண்டுப் பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன என்பதை சித்த மருத்துவ மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

பதிவாளர்.

(C/4143)

## கறுப்பு D. S. I. பாட்டா

நீண்ட காலபாவனைக்கு ஏற்ற D. S. I. கறுப்பு றபர் செருப்பு, 96 மொடல் லேடீஸ் கீல், சோலாப் புரி, மற்றும் பலவற்றுக்கு

**வண்ணக் காலனிப் பூங்கா**

இல. 3, கண்டி வீதி, சாவகச்சேரி.

(41103)

## யாழ். நகரில் இயங்கிய
## எடிசன் அக்கடமி

வடமராட்சி - தென்மராட்சியில்

ஆண்டு 6 முதல் O/L வரை

யாழ். நகரின் அதி சிறந்த ஆசிரியர்களின் புதிய ஒருங்கிணைப்பில் ஆரம்பம்.

**கணிதம்: திரு. B. P. பாஸ்கரன்**

★ ஆரம்பிக்கும் இடம், அனுமதி பெறும் திகதி என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

ஆரம்பம்: **03 - 04 - 1996**

(சி-4133)

## தொடர்பு கொள்ளவும்

இல. 12, 2 ஆம் ஒழுங்கை பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பிமுத்து சிவராசா என்பவரை மோட்டார் சைக்கிள் உரிமை மாற்றம் சம்பந்தமாக அ. கி. தவரஞ்சித் என்பவர் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றார்,

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
மே/பா. V. K. அற்புதராணி,
சிவன் கோவில் வீதி,
சாவகச்சேரி. (41097)

## தமிழீழத்தின் ஒரே தந்திச்சேவை
## யாழ் - வன்னி தொடர்புச் சேவை

உங்கள் செய்திகளை காற்றிலும் கடுகதியில் உரியவர்களிடம் சேர்ப்பதற்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

**குடாநாட்டில்**

✶ சாவகச்சேரியில்:
தேவாலய வீதி,
சாவகச்சேரி

**வன்னியில்**

✶ கிளிநொச்சியில்:
பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அருகில்,
கண்டி வீதி,
கிளிநொச்சி

✶ ஓமந்தையில்:
சோதனை நிலையம்,
ஓமந்தை

(ஈ/004)

## JAFFNA
## NEW SCIENCE ACADEMY

அண்ணா கோப்பி அருகாமை ஒழுங்கை, ஐயா கடையடி மீசாலை — சாவகச்சேரி.

**A/L 97, 96, 95** (பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரிய மீட்டல்)

★ கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ★
★ SPECIAL ENGLISH COURSE ★
★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

ஆரம்பம்: **3-4-96** பிற்பகல் 3.00 மணி

அனுமதிகளை 25ஆம் திகதியிலிருந்து பெற்றுக் கொள்ளவும்.

(சி/4134) — நிர்வாகி

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## யாழ். பல்கலைக்கழக மூதவை, பேரவைக் கூட்டங்கள்

யாழ். பல்கலைக்கழகத்தின் அடுத்த மூதவை, பேரவைக் கூட்டங்கள் முறையே எதிர்வரும் 28-03-1996ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 1-30 மணிக்கும், 29-03-1996 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 9-30 மணிக்கும் கைதடியில் அமைந்துள்ள சித்தமருத்துவத்துறையில் நடைபெறும்.

மூதவை, பேரவை அங்கத்தவர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்று மேற்படி கூட்டங்களுக்குத் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

— பதிவாளர்.

(சி-4141)

## கண்ணீர் அஞ்சலி

**வைத்தீஸ்வரர் ரவீந்திரன்**
(ஆசிரியர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

25 - 03 - 96 அன்று அமரத்துவமடைந்த எமது சக ஆசிரியர் வைத்தீஸ்வரர் ரவீந்திரன் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

25 - 03 - 96 (41226)

## நினைவஞ்சலி

| | செல்வி ப. இராமநாதன் (ஓய்வு பெற்ற அதிபர்) யாழ். இந்து மகளிர் கல்லூரி) | டாக்டர் சி. வேலாயுதன் (கண் வைத்திய நிபுணர்) | திருமதி ப. வேலாயுதன் |
|---|---|---|---|
| தோற்றம்: | 24 - 06 - 26 | 04 - 10 - 25 | 14 - 10 - 30 |
| மறைவு: | 05 - 04 - 87 | 31 - 10 - 91 | 16 - 06 - 92 |
| திதி: | 26 - 03 - 96 | | |

மாறாத அன்புடனும் முழுமையான புரிந்துணர்வுடனும்
வாழ்ந்த உத்தமர்களை நெஞ்சம் மறப்பதில்லை

126/4 அரசடிவீதி,
யாழ்ப்பாணம்.

— சகோதரர் — (41165)

## பிரத்தியேக வகுப்புகள்

**A/L 96, 97**

தமிழ், இந்துசமயம், இந்துநாகரிகம்

''கோப்பாய் சிவம்''

முகவரி:
கு. ஜெகதீஸ்வரசர்மா
வேரற்கேணிக்கந்தசுவாமி கோயில் அருகில்,
மட்டுவில். (41218)

## 60-ம் நாள் நினைவஞ்சலி

**திருமதி துரைராசா சரஸ்வதி**

அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

குடும்பத்தினரும்,
பேரன் நாகதாசனும்,
உறவினர்களும்

நோர்வே. (41223)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அடுத்து ஏன்?

வடக்கில் மற்றொரு பெரிய இராணுவ நடவடிக்கை எந்த நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாம். அதற்கான தயார் நிலையில் படையினர் வைக்கப்பட்டுள்ளனர். —இது அரசாங்க சார்ப்புப் பத்திரிகையான ''சண்டே ஒப்சேவர்'' வெளியிட்டிருக்கும் தகவல்.

வடக்கில் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டபடி ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன— என்று அந்தச் செய்தியையும் அது போன்ற ஏனைய செய்திகளையும் அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.

வலிகாமத்தின் மீது அரசு பெரும் படையெடுப்பை நடத்தி அங்குள்ள மக்களை இடம்பெயரச் செய்து நான்கு மாதங்களே ஆகின்றன. ஆண்டாண்டு காலமாக தாம் வாழ்ந்த வீடு வாசல்களை விட்டு, பரம்பரை பரம்பரையாகக் கஷ்டப்பட்டு உழைத்துத் தேடிய சொத்துக்களைக் கைவிட்டு வந்த அவர்கள் ஏதிலிகளாக, நொந்து, நலிந்து மெலிந்து போயுள்ளார்கள். அந்த வேதனையும், சோகமும் ஆறுவதற்கு முன்னர் அரசு மீண்டும் ஒரு பெருந் தாக்குதலுக்குத் தயாராகி விட்டது.

அரச படைகள் தமது ஆக்கிரமிப்புத் தாக்குதலை வடமராட்சியில் நடத்தினால் என்ன, தென்மராட்சியில் நடத்தினால் என்ன, வேறு எங்கு நடத்தினால் என்ன தமிழ் மக்கள் தமது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அங்கு இருக்க முடியாது.

தமிழர்களின் உலகியல் வாழ்க்கையில் இப்போது மிஞ்சியிருப்பது உயிர் ஒன்று தான். அதனைக் காப்பாற்றும் பொருட்டு இடம்பெயர்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி என்ன?

படையினரின் அடுத்த தாக்குதலின் உண்மையான நோக்கம், தமிழர்களை இயன்றவரையில் கொல்வதும், மிகுதியானோரை மீண்டும் இடம் பெயர்ந்து அலைந்து திரிய வைப்பதும் தான். இதுவரை சிதைத்து நொறுக்காது மிஞ்சியிருக்கும் தமிழ் மண்ணின் பகுதிகளையும் சிதைத்து, இராணுவச் சப்பாத்தை அங்கு பதித்து, தமிழர்களை மிதிப்பதும் ஆகும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர்; அவர்களிடமிருந்து தமிழ்மக்களை விடுவிப்பதற்கான போர்; பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான போர் என்று; கூறியே அரசு இதுவரை தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கும் சமர்களை நடத்தியது.

அரசு கூறிய நோக்கங்களில் ஏதாவது ஒன்றேனும், அந்த ஒன்றின் ஒருபகுதியேனும் இதுவரை எய்தப்பட்டதா? இல்லை, அப்படியிருக்க மீண்டும் ஒரு பெரும் படை எடுப்பு எதற்கு?

தெற்கில் அரசுக்குப் பெரும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது. பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் மக்களை முகம் எடுத்துப் பார்க்க முடியாத நெருக்கடிகள் அவை.

அதனால் வடக்கில் மீண்டும் ஒரு வெற்றியை நிலைநாட்டியதாகக் காட்டி சிங்கள மக்களைத் திசை திருப்ப வேண்டிய தேவை உண்டு

அந்தத் தேவை கருதியே நான்கு மாத இடைவெளியில் வடக்கின் மீது மற்றொரு மோசமான தாக்குதல் நடத்தப்படப்போகிறது.

---

### மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்

# செய்முறைப்பரீட்சையை நடத்துவதில் இதுவரை சுமுகமான தீர்வு இல்லை

## டாக்டர்கள் வர பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுப்பு

சாவகச்சேரி, மார்ச் 26

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இறுதியாண்டுப் பரீட்சைக்கு தோற்றிய 56 மாணவர்களுக்கான செய்முறைப்பரீட்சைகளை நடத்த பல்கலைக்கழகம் தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறது.

மருத்துவபீடத்தில் இறுதியாண்டுப் பரீட்சைக்கு தென்மராட்சி பரீட்சை நிலையத்தில் 56 மாணவர்களும் —

வவுனியாவில் அமைக்கப்பட்ட விசேட பரீட்சை நிலையத்தில் 9 மாணவர்களும் தோற்றியிருந்தனர்.

வவுனியாவில் தோற்றிய 9 மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் கொழும்பில் நடத்தப்பட்டு விட்டன.

ஆனால் தென்மராட்சியில் தோற்றிய 56 மாணவர்களுக்கும் செய்முறைப் பரீட்சைகளை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகளை நடத்த டாக்டர் நைல்ஸ், பேராசிரியர் மகேஸ்வரன், டாக்டர் கே. கணேசரத்தினம் ஆகியோர் கொழும்பில் இருந்து வர வேண்டும்.

அவர்கள் கப்பல்மூலம் வருவதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு இதுவரை வழங்கவில்லை.

கொழும்பு சென்றிருந்த யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் இது தொடர்பாக அங்கு பேச்சுக்களை நடத்தியுள்ளார். [இ-3]

# அரசின் தீர்வு யோசனைகள் புலிகளுக்கு அனுப்பப்படும்

## தெரிவுக்குழுவில் இணக்கம்

கொழும்பு, மார்ச் 26

தற்போது தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசின் தீர்வு யோசனைகள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்படுமாம்.

தீர்வு யோசனைகளை தற்போது பரிசீலனை செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்கள் இதனை ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளதாக ''யுக்திய'' சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக தீர்வு யோசனைகளை விடுதலைப் புலிகளின் தலைமைக்கு கிடைக்கச் செய்லாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்தப் பத்திரிகை தெரிவிக்கிறது.

(இ-3)

## கெற்பலியில் லயன்ஸ் சிகிச்சை முகாம்

தென்மராட்சி, மார்ச் 26

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சியின் கச்சாய், கெற்பலி, பண்டிதர் குடியிருப்பு ஆகிய பகுதியில் உள்ள மக்களுக்கு கண், இரத்த அமுக்கம், நீரிழிவு ஆகிய பரிசோதனை முகாமினை கெற்பலியில் நடத்தவுள்ளனர்.

இப்பரிசோதனை முகாமில் கலந்து கொள்ளவுள்ள இப்பகுதி மக்கள், தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு லயன்ஸ் கழகத்தின் கண் சிகிச்சைப் பிரிவுப் பொறுப்பாளர் சி. கா. நவரத்தினம் கேட்டுள்ளார்.

(இ-117)

# பாடசாலை அதிபர்களுக்கு கிளிநொச்சியில் வெற்றிடம்

கிளிநொச்சி, மார்ச் 26

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 8 பாட சாலைகளில் உள்ள அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்களை கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் கோரியுள்ளார்.

கரைச்சிக் கோட்டத்தை சேர்ந்த இந்துக்கல்லூரி இராமநாதபுரம் ம. வி. ஆகியவற்றுக்கும்—

பூநகரி கோட்டத்தை சேர்ந்த ஞானிமடம் அ. த. க. பாடசாலை, பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாசாலை, மட்டுவில் நாடு அ. த. க. பாடசாலை, சுண்ணாவில் அ. த. க. பாடசாலை, வினாசியோடை (பாலாவி) அ. த. க. பாடசாலை, பரமன்கிராய் அ. த. க. பாடசாலை ஆகியவற்றுக்கும் — அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கு அதிபர் தரம் ஒன்றைச் சேர்ந்தோரும், இராமநாதபுரம் ம. விக்கு அதிபர் தரம் இரண்டைச் சேர்ந்தோரும், ஏனைய பாடசாலைகளுக்கு இம்மாவட்டத்தில் நிரந்தரமாக கடமையாற்றும் பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம் என்றும் —

விண்ணப்பங்கள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்றும் - அவர் தெரிவித்தார்.

பூநகரி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து இம்மாவட்டத்தில் தங்கியுள்ள அதிபர், ஆசிரியர்கள் விண்ணப்பிக்க விரும்பினால் இம்மாவட்டத்தில் நிரந்தரமாக பணியாற்றுவதற்கான இடமாற்றம் கோரும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில், அத்தகையோரின் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படுமென்றும்—

அவர்களுக்கு பாடசாலைகளுக்கு அண்மையில் வதிவிட வசதியும் செய்து கொடுக்கப்படுமென்றும் — கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(இ-3-124)

## சுகாதார ஊழியர் முற்பணம் நிறுத்தம்

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கான மூன்று மாத விசேட கொடுப்பனவு முற்பணத்தை மறு அறிவித்தல் வரை வழங்க வேண்டாமென மாகாண சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தற்சமயம் திருமலையில் தங்கி நிற்கும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பிரதம கணக்காளர் இது குறித்து பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

அவர் இங்கு வரும்போது கொடுப்பனவு சம்பந்தமான இறுதி முடிவை தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-7)

# தபால் தாமதத்தால் 7 பேர் வேலை வாய்ப்பு இழப்பு

சாவகச்சேரி, மார்ச் 26

வடக்குக்கான தபால் சேவை சீர்குலைவால் அரச வேலைவாய்ப்பை ஏழு பேர் இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தட்டெழுத்தாளர் போட்டிப்பரீட்சைக்கு தோற்றி யாழ். மாவட்டத்தில் உச்சபுள்ளியைச் பெற்ற ஏழு பேருக்கு நேர்முகப்பரீட்சைக்கு கொழும்பு வருமாறு கடந்த ஒக்ரோபர் மாதத்தில் பொதுநிர்வாக அமைச்சால் அனுப்பப்பட்ட கடிதங்கள் கடந்த மாதமே அவர்களுக்கு கிடைத்தன கடிதம் கிடைப்பதற்கு முன் நேர்முகப்பரீட்சைக்கான நாளும் கடந்து விட்டது.

இது பற்றி அவர்கள் தமது அவல நிலைக்கு தீர்வுகாண உதவுமாறு யாழ். அரச அதிபரிடம் முறையிட்டனர்.

யாழ். அரச அதிபர் கொழும்பு சென்ற சமயம் பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் கவனத்துக்கு இதனைக் கொண்டு வந்தார்.

''நேர்முகப் பரீட்சைகள் முடிந்து சகல வெற்றிடக்களும் நிரப்பப்பட்டு விட்டன. அடுத்த முறை ஆட்கள் தெரிவாகும்போது அவர்களின் நிலை[illegible] அவர்களிடம் ஒரு முறைப்பாட்டை வாங்கி அனுப்புங்கள்'' என்று யாழ். அரச அதிபருக்கு பதில் அளிக்கப்பட்டது. (இ-3)

## கிளிநொச்சியில் தண்ணீருக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சி, மார்ச் 26

கிளிநொச்சியில் தற்போது நிலவும் கடும் வரட்சியினாலும், கடந்த வருடம் போதிய மழை பெய்யாமையாலும் கிணறுகளின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

ஒருசில கிணறுகள் முற்றாக வற்றியுள்ளன. இதனால் குளங்களிலும், வாய்க்கால்களிலும் மக்கள் குளிப்பதற்காக செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த வரட்சி தொடர்ந்து நீடித்தால் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படலாம் என பேசப்படுகின்றது.

இ-7)

---

# நிதித்துறை அறிவித்தல்

## வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள, தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 27ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ துரைராஜா சௌந்தரராஜா — இல. 24/51, 2ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை கிழக்கு.
★ நடராசா நித்தியானந்தன் — மாதகல் மேற்கு.
★ கந்தசாமி கமலாதேவி — மணல் பகுதி, ஆவரங்கால் தெற்கு.
★ நடராசா சிறீதரன் — இல. 43/1, அம்மன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
★ இளையதம்பி ஆச்சிக்குட்டி — ஆவரங்கால் கிழக்கு, மணல்பகுதி, புத்தூர்.
★ துரைச்சாமி யோகமலர் — சங்கானை கிழக்கு.
★ கந்தசாமி தங்கரத்தினம் — பலாலி கிழக்கு:
★ நல்லையா புலேந்திரன் — சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு, பிரான்பற்று.
★ கிருஸ்ணபிள்ளை சதாசிவம் — இராசாவீதி, கோப்பாய் தெற்கு.
★ வல்லிபுரம் குமாரசாமி — உடுவில் தெற்கு, ஆலடி, சுன்னகம்.
★ அருணாசலம் விக்கினேஸ்வரமூர்த்தி — கட்டுவன் தெற்கு, தெல்லிப்பளை,
★ இராசகுணசிங்கம் (அச்சு) — இல. 9/1, பழம் வீதி, கந்தர்மடம்.
★ இராசலிங்கம் ரவீந்திரன் – இடைக்காடு, அச்சுவேலி.
★ தில்லையம்பலம் இராமேஸ்வரம் — மெமோறியல் வீதி, மானிப்பாய்.
★ மாணிக்கம் நாகரட்ணம் — கோண்டாவில் வடக்கு.
★ மயில்வாகனம் மகேஸ்வரன் — சங்குவேலி வடக்கு.
★ தம்பு சிவபாதசுந்தரம் (MLT) — வளாக வீதி, திருநெல்வேலி.
★ செல்வராசா லோகேஸ்வரி — 'சங்கர் இல்லம்', மானிப்பாய் வீதி, உடுவில்.
★ கந்தையா புஸ்பமலர் — வாதரவத்தை, புத்தூர்.
★ யேம்ஸ் பிரான்சிஸ்கா (வேவி) — இல. 26, பீச் வீதி, குருநகர்.
★ கே. ஜீவரட்ணம் அல்லது மேரி சுசிலா ஜீவரத்தினம் — கொத்துக்கட்டி ஒழுங்கை, நவாலி தெற்கு.
★ சின்னக்குட்டி வீமன் (சரசு) – ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
★ குருமகா சந்நிதானம் — நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.
★ சுவாமிப்பிள்ளை சிவவேதிரி அம்மா — உயரப்புலம், ஆனைக்கோட்டை.
★ அலோசியஸ் சிறிமரியா — மக்கள் இல்லம், உயரப்புலம், ஆனைக்கோட்டை.
★ பேரின்பநாதன் கமலாம்பிகை — (CMS) ஒழுங்கை, கொக்குவில் மேற்கு.
★ தம்பையா ராஜகோபால் — தமிழீழ வைப்பகம், காலையடி, பண்டத்தரிப்பு.
★ சிதம்பரி செல்வராசா — கும்பிளானை, அ[illegible]வெட்டி மேற்கு.
★ ஆறுமுகம் பஞ்சாட்சரம் அல்லது பஞ்சாட்சரம் ரூபாவதி — இல. 45, கனகரட்ணம் வீதி, யாழ்ப்பாணம்.
★ நாகமுத்து இராஜரட்ணம் — மண்டக்குளம் வீதி, இருபாலை கிழக்கு
★ செல்வரட்ணம் இராசமலர் — ''விமலாவாசா, வட்டு கிழக்கு, சித்தங்கேணி.
★ கணபதிப்பிள்ளை — மே/பா நாகேஸ்வரி இராசசேகரம் ''செந்தில்'' அச்சுவேலி தெற்கு.
★ சிற்றம்பலம் கணேசலிங்கம் — கந்தகிரி, அளவெட்டி வடக்கு.
★ ஆசீர்வாதம் ஜோன் — இல 18, புதிய பூங்கா வீதி, குருநகர்.
★ இன்னாசிமுத்து (துரையன்) அக்கினோஸ் அம்மா — இல 15/4, சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய றோட், குருநகர்.
★ குமாரலிங்கம் இரகுநாதன் — இணுவில் மேற்கு.
★ பஞ்சாட்சரம் செல்வக்குமார் — இல 601/2, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
★ அருளானந்தம் (தவம்) — இல 17, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
★ கந்தையா மாணிக்கம் அல்லது சிவலிங்கம் — பன்னாலை, தெல்லிப்பளை மேற்கு.
★ கணபதிப்பிள்ளை பூரணம் — உடுவில், மல்லாகம், சுன்னாகம்.
★ சின்னத்தம்பி நடராசா (இ. போ. சா) — டச் வீதி, கோப்பாய் தெற்கு.
★ இராசையா நித்தியாநந்தன் — உரும்பிராய் தெற்கு, வேம்பன் வீதி, உரும்பிராய் (ஒஸ்கார் லேன்)
★ அன்னம்மா சங்கரப்பிள்ளை — வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு.
★ மாணிக்கம் சுந்தரம் — இல 5, பென்ரிக்கோஸ்ரல் லேன், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
★ மனோன்மணி நடராசா — மே/பா யோ. செல்வராணி ஆனைவிழுந்தான் பலாலி றோட், திருநெல்வேலி.
★ கமலா பரமசிவம் — தியேட்டரடி, சங்கானை.
★ இராமலிங்கம் சிவயோகம் — சுதுமலை வடக்கு.
★ மனுவேல் மரிசிலின் — நவாலி தெற்கு.
★ மரிசிலின் லூசியா தவமணி — நவாலி தெற்கு.
★ கனகரத்தினம் தவராசா அல்லது கமலா தவராசா — இல 88, புங்கன்குளம் வீதி, அரியாலை.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகம் இயங்க அரசாங்கம் மறைமுகத் தடை!

கொழும்பு, மார்ச் 26 யாழ்ப்பாணத்தில் — வலிகாமத்தில் — அன்றி இராணுவத்தினரால் விடுவிக்கப்படாத எந்தப்பகுதியிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழசப் பரீட்சைகளை நடத்தக் கூடாது என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தடை விதித்திருக்கிறது.

அதேபோன்று, கடந்த வருடம் ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வெளியே ஏற்கனவே இயங்கிய பல்கலைக்கழக கல்விசார் திட்டங்களைத் தவிர வேறு எதையும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே நடத்துவதையும் ஆதரிக்க முடியாது என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்துக்கு வெளியே கைதடியிலும், கிளிநொச்சியிலும் முறையே இயங்கும் சித்த மருத்துவத்துறை, விவசாய பீடம் ஆகிய இரண்டுக்குமான மூலதனச் செலவுகளுக்கான ஒதுக்கீடுகள் நிறுத்தப்படும் என்றும் மானிய ஆணைக்குழு யாழ் பல்கலைக்கழக அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இந்த முடிவுகள் யாழ். பல்கலைக்கழகம் இயங்குவதை மறைமுகமாகத் தடை செய்வதற்கு ஒப்பானவை என்று கல்விமான்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மானிய ஆணைக்குழுவின் இந்த முடிவுகளால் 4,000 மாணவர்களின் உயர் கல்வி பாதிக்கப்படப் போவதாகவும் அவர்கள் மேலும் கவலை தெரிவித்தனர்.

(மற்றும் ஒரு செய்தி 3 ஆம் பக்கத்தில் (அ)

## 29 ஆம் திகதி.,

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தது.

இம்முறை நிவாரணத்துக்கு நடைமுறைக்கு வந்த உணவு முத்திரைகளை பெரும்பாலானவர்கள் பெறாத காரணத்தால் விதியோக நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். (இ-3)

## மாதம் 50 000...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புடைய அரச அதிகாரிகளும், சர்வதேச, உள்ளூர் அரசசார்பற்ற அமைப்பு பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## புலிகளின் அதிரடித் தாக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புல்மோட்டை மலையச் சந்தி இராணுவ முகாமில் இருந்து 14 ஆம் கட்டை ஆலயடி முகாம் நோக்கியும்—

14 ஆம் கட்டை ஆலயடி முகாமிலிருந்து மலையச் சந்தி முகாம் நோக்கியும்—

ரோந்து சென்ற படையினரையே 13 ஆம் கட்டை பொலீஸ் நிலையத்தில் இருந்து 300 யார் தூரத்தில் வைத்து வழிமறித்து விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

சுமார் 15 நிமிட நேரம் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் 15 இற்கும் அதிக படையினர் உயிரிழந்ததாகவும்—

ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடியதாகவும்—

இந்த வெற்றிகரத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனவும்—

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்கில் 48 மணி நேரத்தில் இராணுவத்துக்கு ஏற்பட்ட இரண்டாவது பின்னடைவு இது என—

பி. பி. ஸி. நேற்றிரவு குறிப்பிட்டது. (உ-ரி-3-6-7)


## உடன் தொடர்புகொள்ளவும்

யாழ்ப்பாணம், குருநகரில் வசித்த முன்னாள் உதயன் செய்தியாளர் த. பரமலிங்கம் உடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக உத்தியோகத்தர்
உதயன் பணிமனை
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.


## மரண அறிவித்தல்கள்

### இராசலிங்கம் சுப்பிரமணியம்

குரும்பசிட்டியைச் சேர்ந்த இராசலிங்கம்- சுப்பிரமணியம் 25-03-1996 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், சோமசுந்தரம் [புளியங்குளம்], சேதுராசா [ஜேர்மனி], தம்பிராசா [திருநெல்வேலி], காலஞ்சென்ற செல்வராசா, சிவராசா [யாழ். போதனா வைத்தியசாலை], அருளம்மா, அன்னலட்சுமி, சிவபாக்கியம், காலஞ்சென்ற கமலேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, கதிர்காமநாதன், தாமோதரம் பிள்ளை, ஆனந்தன், ஜெயபாலகிருஷ்ணன், மகேஸ்வரி, பரமேஸ்வரி, விஜயலட்சுமி, பரமேஸ்வரி, ரதிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (26-03-96) கற்குழி வடக்கு சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 1-00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயபாலகிருஷ்ணன் (சின்னராசா)
கற்குழி வடக்கு,
சாவகச்சேரி.
[41227]

### செல்வி மணிவண்ணன் மதிவதனி

செல்வி மணிவண்ணன் மதிவதனி காலமாகி விட்டார். அன்னார் அல்வாய் வடக்கைச்சேர்ந்த மணிவண்ணன் வளர்மதி தம்பதியரின் தவப்புதல்வியும், புருசோத்தமன் - மதிவர்ணன் சுகிந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார், இறுதிக் கிரியைகள், 26 - 03 - 96 காலை 10 மணிக்கு அல்வாய் வடக்கில் நடைபெற்று பூதவுடல் பங்கு வேம்படி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தகவல்:
சி. தங்கத்துரை
(பேரன்)
அல்வாய் வடக்கு,
அல்வாய்.
(41100)

### வைத்திஸ்வரன் ரவீந்திரன்

(ஆசிரியர் விற்றோரியக் கல்லூரி - சுழிபுரம்)

மூளாயை பிறப்பிடமாக கொண்ட செல்வன் வை. ரவீந்திரன் நேற்று (25-03-96) காலமானார்.

அன்னார் ஒய்வுபெற்ற விகிதர் ஆ. வைத்திஸ்வரர்— ரத்தினகுலதேவி தம்பதிகளின் ஏகபுதல்வனும், கொலங்கலட்டியை சேர்ந்த க. ஆறுமுகம் (வையாபுரி) தம்பதிகளினதும், மூளாயைச் சேர்ந்த காலஞ்சென்ற முன்னாள் விதானையார் சீனிவாசகம் தம்பதிகளினதும் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-03-96) காலை 8 மணிக்கு வரணி வடக்கில் உள்ள மாசேரியில் (கிராமசேவையாளர் திரு. சி. சச்சிதானந்தம் இல்லத்துக்கு) அருகில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. பத்மநாதன்
(மைத்துனர்)
சீ. இராசநாயகம்
(மாமன்)
(41111)

### திருமதி சின்னம்மா பேரின்பம்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி சின்னம்மா பேரின்பம் கொழும்பில் காலமானார்.

அன்னார் செல்லப்பா பேரின்பத்தின் (யோகா றேடிங் கொம்பனி, கொழும்பு) அன்பு மனைவியும், ஞானமதி - மனோகரன் (கனடா), சரஸ்வதி-பரமேஸ்வரன் (கொழும்பு), குபேந்திரன் (கொழும்பு), கனகேந்திரன் (கொழும்பு), கிருபானந்தன் (சுவிஸ்), யோகவதி (யாழ். பல்கலைக்கழக இறுதியாண்டு கலைப்பீட மாணவி), கிருஷ்ணகுமார் (லண்டன்), மதிதரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தயாருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நண்பிகள்
யோகா றேடிங் கொம்பனி,
40, டாம் வீதி,
கொழும்பு - 12.
(41224)


## ஞானோதய அக்கடமி

கண்டி வீதி, சாவகச்சேரி

**A/L 96, 97 ஆண்டுக்கான**
**கலை, வர்த்தக வகுப்புகள்**

ஆரம்பம் **03–04–96** (பி. ப. 3 மணி,

| | |
|---|---|
| பொருளியள:- | திரு. உதயன் |
| கணக்கியல்:- | திரு. ஸ்ரீ |
| வர்த்ததம்:– | திரு. பசில் |
| வணிகப் புள்ளிவிவரவியல், அளவையியல் | திரு. S. S. மனோகரன் |
| தமிழ்:– | திருமதி அ. மீரா |
| இந்துநாகரீகம், இந்துசமயம் | திரு. பாலா |
| புவியியல்-: | திரு. வேலாயுதபிள்ளை |
| அரசியல்:- | திரு. பஞ்சு |

✶ குறிப்பு:- அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(41229)


## தவறிவிட்டது

மட்டுவிலில் இருந்து காளிகோவில் வீதி ஊடாக நேற்று மாலை நவபுரம் துர்க்கை அம்மன் கோவிலுக்கு சென்று கொண்டிந்தபோது அட்டியல் ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்களை தயவுசெய்து ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

சின்னத்தம்பி உருத்திராபதி
சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு.
(41228)


தென்மராட்சியில்

## பொருளியற் கல்லூரி

ஐயா கடைச்சந்தி, மீசாலை,
சாவகச்சேரி

**A/L 96, 97** கலை, வர்த்தகம்

| | |
|---|---|
| பொருளியல்:- | வரதராஜன் |
| கணக்கியல்:– | ஸ்ரீ |
| வர்த்தகம்:- | வரதன் |
| அளவையியல்:- | சயந்தன் |
| புள்ளி விவரவியல்:- | தவசேகர் |
| இந்துநாகரீகம், இந்து சமயம்:– | ஜோதீஸ்வரன் |
| தமிழ்:- | கணேசலிங்கம் |
| கிறீஸ்தவம்!– | நிரஞ்சன் |
| அரசியல்:- | பஞ்சாட்சரம் |
| புவியியல்:– | மனோ |

ஆரம்பம் **03 - 04 - 96**
புதன் **3 - 00** P. M.

**A/L 96 DAY CLASS**
(A/L 95 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு)
ஆரம்பம்:- **3–4–96** புதன் 2. 00 P. M.

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(41225)


## மரண அறிவித்தல்கள்

### வல்லி இரத்தினம்

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாக கொண்ட வல்லி இரத்தினம் 25-03-96 காலமாகிவிட்டார்.

இவர் நாகம்மாவின் கணவரும், பரமேஸ்வரி, யோகேஸ்வரி, சகுந்தலா, இரஞ்சிதமலர், நிறஞ்சனா (லண்டன்), தவதாஸ் (உதயன்), தயாபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரன், பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), சுதாசன், தவராஜா, தேவனந் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், மயூரன், மைதிலி, மகிழ்தினி, பிருந்தா, டினேசன், கிரிசாந், கீர்த்திகா ஆகியோரின் பேரனும் சின்னத்துரை, அன்னலட்சுமி, காலஞ்சென்ற சின்னமோனே ஆகியோரின் சகோதரனும், பாலசுப்பிரமணியம் (சவுதி), இரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26-03-96) 2-00 மணிக்கு அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மட்டுவில் சிவன் கோவிலடி, கொட்டிது மயானத்துக்கு எடுத்து செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
A. தவராஜா
(மருமகன்)
தற்போதைய முகவரி:
சிவன் கோவிலடி,
மட்டுவில் தெற்கு.
(சி/4144)

### சுந்தரக் குருக்கள் சண்முகானந்த ஐயர் (போடியார்)

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த சுந்தரக் குருக்கள் சண்முகானந்த ஐயர் 22-03-96 அன்று மட்டக்களப்பில் காலமாகிவிட்டார். இவர் மனோன்மணி அம்மாவின் அன்புக் கணவரும், உதயகுமாரி, திலகேஸ்வரி, சிறிமுருகதாஸ், சிவபாலசுந்தரம் (நிதி), சதானந்தன் (சச்சி), செந்தில்செல்வன், வசந்தநாதன், சிவசக்தி (மதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசலிங்கத்தின் அன்பு மாமனாரும், மயூரன், தாரணி ஆகியோரின் அன்புப் பேரனும், முன்னாள் கொத்துக்குளம் மாரியம்மன் கோயில் பிரதமகுரு சுந்தரக் குருக்களின் அன்பு மகனும், சிதம்பரநாதக் குருக்களின் அன்பு மருமகனும், முன்னாள் கொத்துக்குளம் மாரியம்மன் கோவில் பிரதமகுரு சோமாஸ்கந்த குருக்களின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22-03-96 அன்று மட்டக்களப்பில் நடந்தேறியது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவபாலசுந்தரம் (நிதி)
(மகன்)
முகவரி;
சோ. விஜயரத்தினக் குருக்கள்
புற்றளை பிள்ளையார் கோவிலடி,
புலோலி தெற்கு.
புலோலி.
(40383)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ளவர்களது தற்காலிகப் பணிமனையில் 26-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org